செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.12.2018

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : நவம்பர் 2018

### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk

2018 நவம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 1.0% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2018 ஒக்டோபர் மாதத்தில் பதிவாகிய பணவீக்கம் 0.1% ஆக இருந்தது. 2018 நவம்பர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே -1.78%, 2.80% ஆக இருந்த அதேவேளை, 8.4% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 நவம்பர் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 6.9%, 1.5% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2018 ஒக்டோபர் மாதத்தில் பதிவாகிய 124.9 இருந்து 2018 நவம்பர் மாதத்தில் 127.7 ஆக அதிகரித்துள்ளது. இது, 2018 ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 நவம்பர் மாதத்தில் 2.8 சுட்டெண் புள்ளிகள் அதாவது 2.2 சதவீத புள்ளி அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 2.19%ஆல் அதிகரித்தமையும் அதேநேரம் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.04% ஆல் அதிகரித்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் மரக்கறி, பச்சை மிளகாய், அரிசி, எலுமிச்சம்பழம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், முட்டை, தேங்காய், ஈரப்பலா, மிளகாய்த்தூள், தேயிலை, பலாக்காய், பலா விதை, மரவள்ளி மற்றும் கோதுமை மா என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதி புதிய மீன், கோழி இறைச்சி, வாழைப்பழம், பப்பாசிப்பழம், சீனி, மாம்பழம், கருவாடு, தேங்காய் எண்ணெய், அன்னாசிப்பழம் மற்றும் மிளகு என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 நவம்பர் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், 'சுகாதாரம்', 'பொழுதுபோக்கும் கலாசாரமும்', 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்', 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு', 'உணவகமும் ஹோட்டல்களும்', 'வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்' மற்றும் 'ஆடையும் காலணியும்' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். இருப்பினும், 'தொடர்பாடல்', 'அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்' மற்றும் 'போக்குவரத்து' ஆகிய பிரிவுகள் பொருட்டு செலவுப் பெறுமதியில் குறைவு பதிவாகின. அதேநேரம், 'கல்வி' பிரிவு செலவுப் பெறுமதி இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டது.




**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | டிசம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |
| | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |
| | மார்ச் | 122.8 | -0.7 | 2.8 |
| | ஏப்ரல் | 122.9 | 0.1 | 1.6 |
| | மே | 124.3 | 1.1 | 2.1 |
| | யூன் | 126.5 | 1.8 | 2.5 |
| | யூலை | 126.6 | 0.1 | 3.4 |
| | ஓகஸ்ட் | 125.4 | -0.9 | 2.5 |
| | செப்ரெம்பர் | 124.4 | -0.8 | 0.9 |
| | ஒக்ரோபர் | 124.9 | 0.4 | 0.1 |
| | நவம்பர் | 127.7 | 2.2 | 1.0 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்